முருகா

4235

# திருப்புகழமிர்தம்

விரோதி | மாத வெளியீடு




மதுரைத் தமிழ்ச் சங்கம் THE MADURA TAMIL SANGAM

விலை ] [ அணா 3

# எமது புதிய வெளியீடுகள்

**கந்தரலங்காரம்**

திருமுருக கிருபானந்தவாரியவர்கள் எழுதிய விரிவான உரையுடன் கூடியது. (திருப்புகழமிர்தத்தில் தொடர்ந்து வெளிவந்ததைத் தனிப் புத்தகமாக வெளியிடப்பட்டது.) கிரௌன் 1/8 அளவில் சுமார் 400 பக்கங்கள் கொண்டது.

தபாற்செலவு உள்பட விலை ரூ. 3—8—0.

**திருப்புகழ்த் திரட்டு**

(எட்டாவது பதிப்பு)

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள் தொகுத்தது. திருப்புகழ் 238, திருவகுப்பு 8, கந்தரந்தாதி 8, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், பிள்ளைத் தமிழ்ப்பாடல்கள், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ் அஷ்டோத்தரம், ஆறுபடை வீட்டுப்படங்கள் முதலியன அடங்கியது. கிரௌன் 1/8 அளவில் சுமார் 260 பக்கங்கள் கொண்டது.

தபாற்செலவு உள்பட விலை ரூ. 2—8—0.

திருப்புகழமிர்தம் காரியாலயம்,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

---

# நமது புத்தகசாலை

**திருவருட்பா**

(திருமுருக கிருபானந்தவாரி யவர்கள் தொகுத்தது) விலை 1-0-0 தபாற்செலவு 0-6-0.

**பவழேந்திரி**

(கற்பின் பெருமையைக் காட்டும் ஓர் இனிய கதை) விலை 0-12-0 தபாற்செலவு 0-5-0

**திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்**

பகழிக்கூத்தர் அருளியது. முருகனடியார்கள் பாராயணம் செய்யக் கூடிய பக்திச்சுவை ததும்பும் நூல்— விலை 0—8—0. தபாற் செலவு 0-5-0 வேறு.

**மணிமொழிகள் அறுபது**

ஆசிரியர் திருமுருக கிருபானந்தவாரிஅவர்கள் ஆய்ந்தெழுதியது. நல்ல ஆண்டிக் கடிததத்தில் அச்சடித்தது. வர்ணப்பட மேலட்டையுடன் கூடியது. விலை அணு 0—8—0. தபாற்செலவு —— —0.

**வழிகாட்டி**

திருமுருகாற்றுப்படை: திரு. கி. வா. ஜகந்நாதையரவர்கள் எழுதிய விரிவான உரையுடன் கூடியது. விலை 2-8-0. தபாற் செலவு 0-6-0.

---

ஆறுபடைவீட்டுப்படம் (அச்சில்)

உ



ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்

மலர் 14 | விரோதி ஆண்டு தைத் திங்கள் ஜனவரி 1950 | இதழ் 10

## திருப்புகழ்

### சீகாழி

*இரத மான தேனூற லதர மான மாமாத*
*ரெதிரி லாத பூணார முலைமீதே-*
*இனிது போடு மேகாச உடையி னாலு மாலால*
*விழியி னாலு மாலாகி யநுராக;*

*விரக மாகி யேபாய லிடைவி டாமல் நாடோறு*
*ம்ருகம தாதி சேரோதி நிழல்மூழ்கி-*
*விளையு மோக மாமாயை கழலு மாறு நாயேனும்*
*விழல னுய்வி டாதேநி னருள்தாராய்;*

*அரக ராஎ னாமூடர் திருவெ ணீறி டாமூடர்*
*அடிகள் பூசி யாமூடர் கரையேற-*
*அறிவு நூல்க லாமூடர் நெறியி லேநி லாமூடர்*
*அறம்வி சாரி யாமூடர் நரகேழிற்;*

*புரள வீழ்வ ரீராறு கரவி நோத சேய்சோதி*
*புரண பூர ணாகார முருகோனே-*
*புயலு லாவு சேணூடு பரவி நாளு மீடேறு*
*புகலி மேவி வாழ்தேவர் பெருமாளே.*

## பதவுரை

அரஅர எனு மூடர் - பாவங்களைப் போக்கவல்ல இறைவனுடைய திருநாமங்களைக் கூறுத மூடர்களும், திருவெண்ணீறு இடா மூடர் - தெய்வத்தன்மையைத்தரும் வெண்மையான நீற்றினைத் தரித்துக்கொள்ளாத மூடர்களும், அடிகள் பூசியா மூடர் - தேவரீருடைய திருவடிகளைப் பூசிக்காத மூடர்களும், கரை ஏற அறிவு நூல் கல்லா மூடர் - பிறவிப் பெருங்கடலினின்றும் கரையேறும் பொருட்டு அறிவு நூல்களைக் கற்காத மூடர்களும், நெறியிலே நில்லா மூடர் - நீதி நெறியிலே நிற்காத மூடர்களும், அறம் விசாரியா மூடர் - அறத்தை ஆராய்ந்து அறியாத மூடர்களும், நரகு ஏழில் புரள வீழ்வர் - ஏழு நரகங்களில் புரண்டு துன்புறும் பொருட்டு வீழ்வர்; ஈராறு கர - பன்னிரு கையரே! விநோத - ஆனந்த சொரூபரே! சேய் - இளம் பூரணரே! சோதி - ஒளிமயமானவரே! புராண - பழைமையானவரே! பூரண ஆகார - எங்கும் நிறைந்த வடிவினரே! முருகோனே - முருகக் கடவுளே! புயல் உலாவு சேண் நாடு பரவி - மேகங்கள் உலாவுகின்ற விண்ணுலகம் புகழ்ந்து, நாளும் ஈடேறும் - என்றும் கடைத்தேறுவதற்கு உரியதாகிய, புகலி மேவிவாழ் - சீகாழியில் எழுந்தருளி வாழ்கின்ற, தேவர் பெருமாளே - தேவர்கள் போற்றும் பெருமையின் மிக்கவரே! இரதமான - இனிமையான, தேன் ஊறல் அதரமான மாமாதர் - தேன் ஊறுகின்ற இதழ்களுடன் கூடிய அழகிய பெண்களது, எதிர் இலாத பூண் ஆர - சமானமில்லாத ஆபரணங்களோடு கூடிய, முலைமீது இனிது மூடும் ஏகாசமுடையினுலும் - தனங்களின்மீது அழகாக மூடியுள்ள மேல் ஆடையினுலும், ஆலால விழியினுலும் - ஆலாகல விஷம் போன்ற கண்களினுலும், மால் ஆகி - மயக்கமுற்று, அநுராக விரகம் ஆகி - காமப் பற்றுடன் மோகத்தைக் கொண்டு, பாயல் இடைவிடாமல் நாள்தோறும் - சயனத்தின்மீது நாள்தோறும் ஒழியாமல் படுத்து, ம்ருகமத ஆதி சேர் ஓதி நிழல் மூழ்கி - கஸ்தூரி முதலிய நறுமணங்கள் சேர்ந்துள்ள பெண்களின் கூந்தலின் நிழலின் முழுகி, வளையும் மோக மாமாயை சுழலுமாறு - மிகுதியாக உண்டாகும் மோகத்தினுல் பெரிய மாயையில் சுழலுகின்றவனுய், நாயேனும் விழலனுய் விடாதே - அடியேன் வீணுகிவிடாமல், நின் அருள் தாராய் - தேவரீரது திருவருளைத் தருவீர்.

## பொழிப்புரை

வினைகளை விலக்கவல்ல அர அர என்ற திருநாமத்தைக் கூறுத மூடர்களும், தெய்வீகத்தைத் தரும் வெண்ணீற்றைப் பூசாத மூடர்களும், தேவரீரது திருவடிகளை வழிபடாத மூடர்

களும், பிறவிப்பெருங்கடலினின்றும் கரையேறுமாறு ஞான நூல்களைக் கல்லாத மூடர்களும், நன்னெறியிலே நிற்காத மூடர்களும், அறத்தை ஆய்ந்து அதன் வழியைப் பற்ருத மூடர்களும், ஏழுநரகங்களில் வீழ்ந்து துன்புறுவார்கள்; பன்னிரு கைப்பரம! ஆனந்த சொரூபரே! இளம்பூரணரே! ஒளிப்பொருளே! பழையவரே! எங்கும் நிறைந்தவரே! முருகவேளே! மேகங்கள் உலாவும் விண்ணுலகவாசிகள் புகழ்ந்து கடைத்தேறுமாறு சீகாழியில் எழுந்தருளியுள்ள தேவர்கள் போற்றும் பெருமிதமுடையவரே! இனிமையான தேன்ஊறும் இதழ்களுடைய அழகிய பெண்களின், நிகரில்லாத அணிகலன்களுடன் கூடிய தனபாரங்களின்மீது அழகாக மூடிய மேல் ஆடையினுலும், ஆலாலவிடம்போன்ற கண்களினுலும் அடியேன் மயங்கி, காமப்பற்றுடன் மோகமுற்று, பஞ்சணையில்கிடந்து கஸ்தூரி முதலிய நறுமணங்களுடைய கூந்தலின் நிழலில் எப்பொழுதும் முழுகி, மென்மேலும் உண்டாகும் மோக சிந்தையுடன் பெரிய மாயையில் சுழன்று அடியேன் வீணுகி விடாவண்ணம் உமது திருவடிகளைத் தந்து அருள்புரிவீர்

## விரிவுரை

இரதமான தேனூறல் அதரமான மாமாதர்:—

காமுகர்க்குப் பெண்களுடைய அதரபானம் தேன்போல் தித்திக்கும்.

> பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
> வாலெயி றூறிய நீர் —திருக்குறள்.

ஏகாச உடையினுலும்:—

ஏகாசம்—மேலாடை.

"பொருபூதரமுரித்து ஏகாசமிட்ட புராந்தகர்" என்று, கந்தரலங்காரத்தில, ஏகாசம் என்ற சொல் பயின்றிருப்பதைக் காண்க. (ஒரு பூதரும் என்று தொடங்கும் செய்யுள்) பொதுப் பெண்கள் அழகிய ஆடையை மேல் மூடி உள்ளத்தைக் கொள்ளை கொள்வர்.

"கொடுந்தானைக் கோட்டழகும்" என்பது நாலடி. "ஏகாசமான வுடைவீசி" என்று திருமாகாளம் திருப்புகழிலும் கூறுமாறு காண்க.

### ஆலால விழியினாலும்:—

ஆலகால விடம் போன்ற கருமையான கண்கள். அன்றியும் நஞ்சு உண்டாரையே கொல்லும். இந்தக்கண் கண்டாரையும் கொல்லும்.

### மாலாகி:—

மால்—மயக்கம். விலைமகளிரது மேலாடையினாலும் விழியினாலும் ஆடவர் மயங்குவர். அம்மயக்கமே பிறப்புக்கு வித்தாகின்றது.

காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய். — திருக்குறள்.

### அநுராக விரகமாகி:—

அநுராகம்—காமப்பற்று. விரகம்—மிகுந்த வேட்கை.

"வளம்புனைந்த அநுராகபோக மிகு மாதர் மங்கையர் பொருட்டினால்
விளம்புமிந்த மொழியொழிக என்றனுயிர் வேண்டுமெனினும் வழங்குவேன்"
— பாரதம்.

### அரகரா வெனாமூடர்:—

ஹரன்—பாவங்களைப் போக்குபவன். சிவ நாமங்களுக்குள் சிறந்த நாமம் இது. துயரங்கள் இன்றி வாழ வேண்டுமென்பதே உயிர்களின் நோக்கம். துயரங்கள் நீங்கவேண்டுமானால் இந்த ஹர ஹர என்ற திருநாமம் எங்கும் ஒலிக்க வேண்டும்.

"எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமுந் துயர் தீர்கவே"

என்று அருளிச் செய்தார் திருஞானசம்பந்தர்.

புனிதமாகிய அரநாமத்தைக் கூறாது அல்லல்படு மாந்தர்களின் அறிவின்மையைக் கருதி அடிகள் வருந்துகின்றனர். துன்பத்தைத் தவிர்த்து இன்பத்தைத் தரவல்லது இத் திருநாமம். இதனையறியாது துன்ப நீக்கத்திற்கு வேறுவேறு சாதனங்களை மேற்கொள்வது. கரும்பிருக்க இரும்பைக் கடிப்பது போலும் என்க.

ஹரஹர என்று அனுதினமும் உள்ளம் உருகி உரைப்பவர்க்கு அரிய காரியம் அகிலவுலகங்களிலும் இல்லை. அமரத்வத்தையளிக்கவல்லது. பிறவாத பெற்றியைத் தரும்.

அரகர வென்ன அரியதொன் றில்லை
அரகர வென்ன அறிகிலர் மாந்தர்
அரகர வென்ன அமரரும் ஆவர்
அரகர வென்ன அரும்பிறப் பன்றே. —திருமந்திரம்.

"கந்தவுலகிலே முருகவேளுடைய கொலுவில் அடியார்கள் "அரகரா" என்று ஒலிக்கும் ஒலி கடல்போல் முழங்கும்" என்று கொலு வகுப்பில் அடிகள் கூறுகின்றனர்.

"வருசிவனடியவர் அரகர எனமுறை
வழங்கு கடல்போல் முழங்க ஒருபால்"

## திருவெண்ணீறிடாமூடர்:—

சிவஞான மயமானது திருநீறு. "சத்திதான் யாதோ வென்னில் தடையில்லா ஞான மாகும்" என்ற சித்தியாரது திருவாக்கின்படி ஞானமே சத்தியாகும். ஆதலின் திருவருள் சத்தி சொரூபமானது. "பராவணமாவது நீறு" என்றார் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர். திருநீற்றினை யணிந்துகொள் வார்க்கு நோயும் பேயும் விலகும். எல்லா நலன்களும் உண் டாகும். சர்வமங்கலங்களும் பெருகும். தீவினை கருகும்.

எல்லாவற்றையுந் தூய்மை செய்வது பசுவின் சாணமே யாகும். அதனால் ஆகிய திருநீறு, உள்ளத்தையும் உடம்பையுந் தூய்மைசெய்யவல்லது. நிறைந்த தவம் புரிந்தவர்க்கே திரு நீற்றில் மிகுந்த அன்பு உண்டாகும். தவஞ்செய்யாத பாவி கட்குத் திருநீற்றில் அன்பு உண்டாகாது.

எத்தகைய பாவங்களைப் புரிந்தவராயினும், பெரியோர்கள் இகழ்கின்ற ஐம்பெரும் பாவங்களைச் செய்தவராயினும், விபூதியை அன்புடன் தரித்து நல்வழிப்படுவராயின், முன் செய்த பாவங்களினின்றும் விடுபட்டு செல்வம்பெற்று, உலக மெல்லாம் போற்றும் பெருமையையடைவார்கள்.

யாது பாதகம் புரிந்தவ ராயினும் இகழும்
பாதகங்களில் பஞ்சமா பாதக ரெனினும்
பூதி போற்றிடில் செல்வராய் உலகெலாம் போற்றத்
தீது தீர்ந்தனர் பவுத்திர ராகியே திகழ்வார்.
—உபதேசகாண்டம்

சிவதீட்சை பெற்று ஒவ்வொருவரும் முறைப்படி திருநீறு பூசி இறைவன் திருவருளைப் பெறவேண்டும்.

திரிபுண்டரமாகத் திருநீறு பூசும்போது, இடையில் துண்டுபடுதல், ஒன்றுடன் ஒன்றுசேர்தல், அதிகமாக விலகுதல், வளைதல், முதலிய குற்றங்களின்றி அணிதல் வேண்டும். நெற்றி, மார்பு, தோள் ஆகிய மூன்று இடங்களில் ஆறு அங்குல நீளமும், ஏனைய அங்கங்களில் ஒவ்வோரங்குல நீளமுமாகத் தரித்தல்வேண்டும். மூன்று கீற்றாக அழகாக அணிதல் சிறப்பு.

மூன்று வேளையும் இவ்வாறு திருநீறு திரிபுண்டரமாகப் புனைதல்வேண்டும். முடியாது ஒருவேளையேனும் முறைப்படி திருநீற்றினைத் திரிபுண்டரமாகத் தரித்தவர் உருத்திர மூர்த்தியேயாவார். இவ்வண்ணம் உயர்ந்த திரிபுண்டரமாகத் திருநீற்றினையணிந்து பதிதருமம் புரிவோர் நிகரில்லாத மும்மூர்த்திமயமாவார் என்று வேதங்கள் கூறுகின்றன.

அறவொன் றுடனொன் றணுகல்நனி யகறல் வளைதல் இடையறுதல்
பிறவும் ஒழிய அணிநீற்றில் பெறு மளவு நுதலுரந் தோட்
குறுமங் குலமூ விரண்டாகும் ஒழிந்த வுறுப்புக் கொனறேயாம்
இறுமெல் லிடையாய் திரிசூலத் தெழிலார் பூதி யிடலுமாம்

—பேரூர்ப்புராணம்

முப்பொழுதி னொருபொழுதாயினுந் திருவெண்ணீற்றினன் [முறைவழாமல்
அப்புனித அந் திரிபுண்டரமிடுவோன் உருத்திரனே ஐயமில்லை
இப்பரிசு நற்றிரிபுண் டரமிடுவோன் இறைதருமத் திசைவுற் [றன்னோன்
ஒப்பரிய மும்மூர்த்தி மயனுவன் எனச்சுருதி யுரைக்கு மன்றே

—சித்தாந்த சிகாமணி.

இத்தகைய சிறந்த சாதனமாகிய திருநீற்றினைப்புனைந்து திருவருள் நலத்தைப் பெறுதவர்களை மூடர் என்பதில் என்ன தடை?

## அடிகள்பூசியா மூடர்:—

இறைவனுடைய திருவடிகளைப் பூசித்தலே பிறவியின் பயனுகும். இறைவன தந்த கரங்களால் அவரைப் பூசிக்கவில்லையானால் நன்றி மறந்த பாவம் எய்தும்.

பூஜா என்ற சொல் தமிழில் ஐகார ஈறுபெற்று பூஜை என்று திரிந்தது. பூ—மலங்களைப் பூர்த்திசெய்து, ஜா—சிவ ஞானத்தை உண்டாக்குவது.

வேதநாயகன் இலிங்க பூசனை செயும் மேலோன்
போதன் மாயவன் மூவுலகுந் தொழும் புனிதன்
ஓதுமாங்கவன் பெருமையார் உரைப்பரவ் வுரவோன்
பாத தூளியைச் சென்னியில் பலன் பெறத் தரிப்பேன்.
—சிவரகசியம்.

பூசை செய்கின்ற நேரமே நம்முடைய நேரம். பூசைசெய்கின்ற மனிதப்பிறப்பே உயர்ந்த பிறப்பு. பூசை புரியாத நாள் வீணாளாகும்.

"உம்பர்கள் சுவாமி நமோ நம எம்பெருமானே நமோநம
ஒண்டொடி மோகா நமோநம எனநாளும்
உன்புகழேபாடி நானினி அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திட வீணாள்படாதருள் புரிவாயே"
—திருப்புகழ்

பூசைசெய்யத் தொடங்குமுன் இந்த திருப்புகழடிகளைக் கூறி இறைவனைத் தியானிக்கவேண்டும்.

## கரையேற அறிவுநூல் கலாமூடர்:—

பிறவியாகிய பெருங்கடலில் வீழ்ந்த உயிர்கள், ஆசாரியனாகிய மீகாமனோடு கூடிய சாத்திரமாகிய கப்பலில் ஏறவேண்டும் என்க. ஏறினால் முத்தியாகிய கரையேறலாம்.

உலகிலேயுள்ள நூல்கள் யாவும் நம்மை உய்விக்காது. கற்கத் தகுந்த நூல்களையே கற்க வேண்டும். அதனாலேயே திருவள்ளுவர், "கற்க கசடற கற்பவை" என்றனர். அறிவு நூல்களாவன பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட நூல்களும் அதன்வழி நூல்களுமாகும். சிவஞானபோதம் முதலிய ஞான சாத்திரங்களே நமது ஐயந்திரிபுமயக்கங்களையகற்றி சிவப்பேற்றையளிக்கும்.

அநபாயன் என்ற சோழமன்னன், ஜீவக சிந்தாமணியென்ற அவநூலைப் படித்தபோது, அமைச்சராகிய சேக்கிழாரடிகள், "ஏ மன்னர் பெருமானே! இது அவநூல்; இதனை நீ பயில்வதனால் பயனில்லை. சிவநூலைப் படிக்க வேண்டும். கரும்பிருக்க இரும்பு கடித்தல் கூடாது." என்று தெருட்டினர்.

ஆதலின் அட்டைப் பகட்டுடன்கூடி வெளிவந்துலாவும் அறிவை மபக்கும் நூல்கள் பல; அறநெறியைத் தாங்கிநிற்கும் நூல்கள் சில. ஆதலின் அறநெறியைத் தாங்காத நூல்களை வாங்கிப் படிக்காமல், ஆன்றோர்கள் கூறிய அறிவு நூலகளைப் படித்து உலகம் உய்வதாக.

## நெறியிலே நிலா மூடர்:—

நெறி என்பது வழியென்க. ஒரு ஊருக்குப் போகவேண்டும் என்று நடப்பவன், கண்ணிற்கண்ட வழிகளில் எதுவாயினும் அதிலே நடக்கமாட்டான். எந்த வழியிற் சென்றால் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேரலாமோ அந்த வழியில்தான் நடப்பான். அதுபோல் பரகதியை நாடிவந்த நாம் உலகில் காணப்படும் அவநெறிகளிற் செல்லாது, தவநெறியிற் செல்லுதல் வேண்டும். அத்தவநெறி இறைவன்பால் வேண்டிப் பெறுதல் வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்துறையூரில் இறைவர்பால் தவநெறியை வேண்டிப் பெற்றனர்.

“தவநெறி தனைவிடு தாண்டுகாலியை” என்றார் கூந்தலூர்த் திருப்புகழில். கால்போன வழியிலே நடக்கும் பேதையைப்போல் மனம்போன வழியிலே சென்று இடர்ப்படுவோர் மூடர்கள் ஆவார்கள்.

## அறம் விசாரியா மூடர்:—

அறம் எது? அறம் அல்லாதது எது? என்று ஆராய்ந்து அறத்தைக்கடைப்பிடித்து, அறப்பண்புடன் வாழ்தல் வேண்டும். அறம் உயிர்க்கு உறுதி செய்வது. “அறனை மறவேல்” என்றார் ஔவைப்பிராட்டியார். இறைவனுக்கு அறமே வடிவாகின்றது.

அறமே மறங்கள் முழுதளிக்கும் அறமே கடவுள் உலகேற்றும்
அறமே சிவனுக் கொருவடிவம் ஆஞ்சிவனை வழிபடுவோர்க்
கறமேயெல்லாப்பெரும்பயனும் அளிக்கும்பார்க்கும் எவ்விடத்தும்
அறமே அச்சந்தவிர்ப்பதென அறைந்தான் சாதாதபமுனிவன்.

—காஞ்சிபுராணம்.

இறைவன் சூரபன்மனுக்கு எண்ணில்லாத வரங்களை வழங்கியபோது, 1008 அண்டங்களையும் ஆள்வாய்; அறநெறியினின்றும் வழுவுவாயெனின், நமது சக்தி உன்னை வெல்லும்” என்று அருளிச் செய்தனர். ஆதலின் அறநெறியினின்றும் வழுவுதல் கூடாது.

உலகிற்கு அறிவுரை பகரவந்த ஔவையார் தொடக்கத்தில் “அறஞ்செய விரும்பு” என்று கூறியதையும், திருவள்ளுவர் நீத்தார் பெருமை கூறியபின் “அறன் வலியுறுத்தல்” என்ற அதிகாரத்தினைக் கூறியதையும் உற்று நோக்குக.

அதிகார இயைபு கூறவந்த பரிமேலழகர் "அம் முனிவரா னுணர்த்தப்பட்ட (அறம்பொருள் இன்பம் என்ற) அம் மூன்ற னுள், ஏனைப் பொருளும் இன்பமும் போலாது, அறன், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்து" கூறுமாறுகாண்க.

சிறப்பீனுஞ் செல்வமு மீனும் அறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு. —திருவள்ளுவர்.

நரகேழிற் புரளவீழ்வர்:—

மேலே கூறிய மூடர்கள் ஏழுநகரங்களில் புரண்டு துன் புறும் பொருட்டு வீழ்வார்கள்.

புரண:—

புராண என்பது புரண என்று குறுகியது. புராணம்— பழைமை. சிவமூர்த்தியினது பழைய வடிவம் ஆறுமுகவடிவம் என்க.

"பரமகுருவாய் அணுவிலசைவாய்
பழையவடிவா இயவேலா" —திருப்புகழ்.

"அந்திக்கு நிகர் மெய்யண்ணல் அருள்புரிந்து அறிஞராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான்"
—கந்தபுராணம்.

புகலி:—

சீகாழிக்கு உரிய பன்னிருநாமங்களுள் ஒன்று புகலி என்பது. உயிர்களுக்கு அதுவே புகலிடம் ஆதலின் புகலி எனப்பெற் றது. உலகம் அழிந்தபோதும் அழியாது அது தோணிபோல் மிதக்குந் திருவுடைய திருத்தலம்.

## கருத்துரை

சீகாழிமேவுந் தேவதேவரே! முருகவேளே! தீயவர் நரகில் வீழ்ந்து நடலையுறுவர். அடியேன் மாதர்வசமாகி வீணாகாவண்ணம் திருவருள் தந்து ஆட்கொள்வீர்

# பெரியபுராணம்

## திருநாவுக்கரசு நாயனார் புராணம்

(உருஅ-வது பக்கத் தொடர்ச்சி)

### திருப்புகலூர் சென்றது

திருநாவுக்கரசு நாயனார் திருப்புகலூரரைச் சேவிக்கவேண்டும் என்று விரும்பி, தியாகேசப் பெருமானிடம் பிரியாவிடை பெற்று, திருவாரூரினின்றும் புறப்பட்டார். இடையில் உள்ள திருப்பள்ளியின் முக்கூடல் திருவிற்குடி; திருப்பனையூர் முதலிய திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருப்புகலூரின் எல்லையை யடைந்தார்.

### திருஞானசம்பந்தரது இரண்டாவது சந்திப்பு

திருஞானசம்பந்தர் சீகாழியினின்றும் புறப்பட்டு, பன்னுகமணிந்த பரமனது பதிகளைப் பணிந்துகொண்டு திருப்புகலூர் வந்து சிவமூர்த்தியைத் தொழுது, அன்புவடிவாகிய முருக நாயனாரது திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர். வாகீசப் பெருந்தகை ஆரூர்மேவும் அண்ணலை வணங்கி, பூம்புகலூரரை நோக்கி வருகின்றார் என்ற செய்தியை பாலறுவாயர் கேட்டு, எதிர்கொண்டு அழைக்க விரும்பி, திரண்ட அடியார் திருக்கூட்டம் புடைசூழப் புறப்பட்டு எதிரே சென்றார். சீகாழிப் பிள்ளையார் எதிர்கொள்ளவருவதைக் கேட்ட திருநாவுக்கரசர் எல்லையில்லாத மகிழ்ச்சியடைந்தார். இரு பெருமக்களைச் சூழ்ந்துள்ள திருநீற்றுத் தொண்டர் குழாம் இரண்டும், இரண்டு நிலவின்கடல் அணைந்ததுபோல் கலந்தது.

வாக்கின் மன்னர் விரைந்து சென்று புகலியர்கோனை இறைஞ்சினார். சம்பந்தப்பிள்ளையார் எதிரே இறைஞ்சி "அப்பரே! நீர் சேவித்த திருவாரூரில் நிகழும் பெருமையை வகுத்துரைப்பீர்" என்று கேட்டருளினார். அப்பரடிகள், திருவாரூரில் திருவாதிரைத்திருநாளின் சிறப்பை என்னென்று எடுத்துரைப்பேன்?" என்று கீழ்வரும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர் களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தனாரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்.

அந்த மொழிமாலைச் செந்தமிழ்ப் பதிகத்தைக் கேட்ட சிவனார் மகனார் "அப்பரே! பூம்பொய்கை சூழ்ந்த திருவாரூர் சென்று திருவாதிரைத் திருநாள் விழாவயர்ந்த தேனாரமுதைக் கண்டு வணங்கிவிட்டு, இங்குவந்து உம்முடன் தங்குவேன்" என்று கூறி விடை பெற்று அப்பொழுதே அங்கிருந்தே புறப் பட்டுத் திருவாரூரை நோக்கிச்சென்றனர்.

திருநாவுக்கரசர் திருப்புகலூரில் புகுந்து, அரவணிந்த அரனாரை அன்புடன் கண்ணீர் பொழிந்து, தண்டமிழ் மொழிந்து போற்றி செய்தனர். காலபூசைகள் தோறும் இறை வனை வணங்கிக்கொண்டும் உழவாரப் பணி செய்துகொண்டும் அங்கு உறைவாராயினர்.

நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி
ஏருடைக் கதிர்களாகி இமையவர் இறைஞ்சநின்றார்
ஆய்வதற் கரியராகி அங்கங்கே யாடுகின்ற
தேவர்க்குந் தேவராவார் திருப்புக லூரனாரே.

திருப்புகலூரில் இருந்துகொண்டே அண்மையில் உள்ள திருச்செங்காட்டங்குடி, திருநள்ளாறு, திருச்சாத்தமங்கை, திருமருகல் முதலிய சீருடைத் தலங்கள் சென்று வணங்கி வந்தார்.

குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் றன்னைக்
குலவரையன் மடப்பாவை யிடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்த மாட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையினானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
தவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங் கொடுக்கு நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

இவ்வாறு ஆளுடைய அரசு திருப்புகலூரில் திருஞானசம் பந்தப் பிள்ளையாரின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர்.

அழுதுலகை வாழ்வித்த கவுணியகுலதிலகராகிய பிள்ளையார் திருவாரூராளும் செஞ்சடைக்கடவுளைச் சேவித்துவிட்டு திருப்பூம்புகலூருக்கு எழுந்தருளினர். அரசு அவரை எதிர் கொண்டு அவருடன் அப்பதியில் தங்கியிருந்தார். அப் பெரு மக்கள் இருவரும் அங்கு சேர்ந்து உறையும் பெருமையைக் கேட்டு, சிறுத்தொண்ட நாயனரும், திருநீலநக்கரும், திருப்புக லூருக்கு வந்து முருகநாயனர் திருமடத்தில், இரண்டு ஞான மூர்த்திகளையும் வணங்கி உடன்உறையும் பேறு பெற்றனர். இன்னும் பற்பல அடியார்கள் வந்து தங்கி திருப்பதிகங்களின் சுவையமுதை யுண்டு ஒருப்பட்ட சிந்தையுடன் தங்கி உடன் உறையும் பெரும் பேறு பெற்றார்கள்.

ஏனைய திருத்தலங்களை வணங்கித் திருத்தொண்டு புரிய விரும்பிய திருநாவுக்கரசு நாயனர் புகலூர் மேவிய புண்ணி யரை வணங்கிப் புறப்பட்டார். திருநீலநககர், சிறுத்தொண்டர் முருகனர் முதலிய அடியார்கள் ஆராத காதலுடன் ஊர் கடந்து வழிவிட்டு வணங்கி விடைபெற்றுச் சென்றார்கள். சிவஞானப்பாலுண்ட செம்மலோடு திருவம்பர் சென்று வணங்கி திருக்கடவூர் சேர்ந்தனர். அங்கு குங்குலியக்கலய நாயனர் எதிர்கொண்டு வணங்கினர். கூற்றை யுதைத்த குன்றவில்லியை தணியாத அன்புடன் திருப்பதிகம் பாடி வணங்கினர்கள். குங்குலியக்கலயருடைய திருமடத்தில் தங்கி, அவர் குறைவற உபசரிக்கத் திருவமுது செய்தார்கள்.

ஆளுடைய அரசும் ஆளுடைய பிள்ளையும் அங்கிருந்து புறப்பட்டு, திருக்கடவூர் மயானம், திருஆக்கூர் முதலிய தலங் களைத் தொழுதுகொண்டு திருவீழிமிழலையை யடைந்தார்கள்.

### படிக்காசு பெற்றது

திருவீழிமிழலையுள் வாழும் அடியார்கள், திருநாவுக்கரசும் திருஞானக்கன்றும் வருவதையறிந்து கடல் பொங்கியதுபோல் காதல் பொங்க எதிர்கொண்டு வணங்கினர்கள். வணங்கிய அடியார்களைத் தாமும் வணங்கி உள் புகுந்தார்கள். திருவீழி மிழலை வாழும் அடியார்கள் தங்கள் வீதிகளை யெல்லாம் அலங் கரித்தார்கள். வாழைக்கமுகுகளை நாட்டினர்கள். வீடுகள் வாயில் தோறும் நிறைகுடமும் திருவிளக்கும் வைத்தார்கள், தூபமிட்டார்கள்.

திருநாவுக்கரசு நாயனர், திருஞான சம்பந்தரும், அடியார்களும் உடன்வர விண்ணின்றும் இறங்கிய விமானத்தையுடைய கோயில்வாயில் சென்றனர். திருக்கோயிலை வலம் வந்து திருமுன் வணங்கி உட்புகுந்து முக்கண் முதல்வர் சேவடி மீது விழுந்தார்; எழுந்தார்; விம்மினர். திருப்பதிகம் பாடினர். அத்தலத்தில் பன்னுள் தங்கியிருந்தார். திருஞானசம்பந்தரும் ஒரு மடத்தில் அடியவருடன் இருந்தனர்.

சில நாள்களுக்குப்பின் மாரியின்றி காவிரி நதியும் நீரின்றி வற்றியது. அதனல் விளைவின்றி எங்கும் வறுமை மிகுந்தது. உலகமெங்கும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பட்டினியால் பெரிதும் வருந்தினர்கள். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்ற இரு பெருந்தகையார்களது கனவில் திருவீழிமிழலை மேவும் செஞ்சடைக் கடவுள் எழுந்தருளி, "கால நிலைமையால் நீங்கள் கவலையடைய மாட்டீர்கள்; உங்களை வழிபடுவோர்க்கு அளிக்கும் பொருட்டு நாம் உங்கட்கு நாள்தோறும் படிக்காசு தருவோம்; அதுகொண்டு அடியார் மிடியை அகற்றுவீர்கள்" என்று அருளிச்செய்து, உலகம் அறிய திருக்கோயிலில் மேற்புறமுள்ள பீடத்திலும் கீழ்ப்புறமுள்ள பீடத்திலும் படிக்காசு வைத்து அருளினர். பறைசாற்றி அடியார்கட்கு அன்னதானம் புரிந்தார்கள்.

அல்லார் கண்டத் தண்டர்பிரான் அருளால் பெற்ற படிக்காசு
பல்லாறியன்ற வளம்பெருகப் பரமனடியா ராளுர்கள்
எல்லாம் எய்தி உண்கஎன இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்.

உமை திருமுலைப்பாலுண்ட திருஞானசம்பந்தர் திருமகனர் ஆதலின் வாசியுடன்கூடிய காசும், மெய்வருந்தத் திருத்தொண்டு புரிகின்ற காரணத்தினல் வாகீசப் பெருந்தகையார் வாசியில்லாத காசும் பெற்றுர்கள். ருவருடைய திருமடங்களில் அடியார்கள் நாள்தோறும் இரண்டு வேளையும் உண்ண உண்ணக் குறைபாது திருவருளால் வளர்ந்தது. எல்லோரும் இன்புற்றிருந்தார்கள். காலக்குற்றங் கழிந்து மழை பொழிந்தது. யாண்டும் நன்கு விளைந்தது. வறுமைப் பேய் அகன்றது. ஞானமூர்த்திகள் இருவரும் திருவீழிமிழலைப் பெருமான்மீது பல மொழிமாலை புனைந்தார்கள்.

(தொடரும்)

முருகா

# சிவஞானியின் சிறப்பு

தருமபுரம் ஆதீனத்தை முதல் முதலாகத் தோற்றுவித்த குருமூர்த்தி குருஞானசம்பந்த சுவாமிகள். அவர்கள் சைவ சித்தாந்த ஞானதேசிகராக விளங்கியவர்கள். இவர்களது ஞானபரம்பரையில் 7-வது ஆச்சாரிய மூர்த்திகளாக வந்தவர்கள் திருவம்பலதேசிகர் அவர்கள். சிவஞானதீபமாய் விளங்கிய இவர்கள் தம்மையடுத்த சீடர்களுடைய மலமாயாகன்மங்களை நீக்கி சிவஞானச் செல்வத்தை வழங்கிவந்தார்கள்.

வேலூர் சுப்பராயச் செட்டியார் என்பவர் காலஞ் சென்ற தன் தாயாருககுச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்துவிட்டு, திருவமபல தேசிகர்பால் வந்து, வணங்கி, "தாயாருக்கு வீடுபேறு கிடைக்குமாறு அருள்புரியவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். ஞான குருமூர்த்திகள், தமது ஞான நோக்கினுல் அந்தச் செட்டியாருடைய தாயின் உயிர் அவருடைய மனைவி வயிற்றில் கருவுற்றிருப்பதனை அறிந்தனர். செட்டியாரைப் பார்த்து, "உமக்கு தாய் வீடுபெறுதல் வேண்டுமா? மகப்பேறு வேண்டுமா?" என்று வினவியருளினார்கள். செடடியார் "தாயின் வீடுபேறுதான் இப்போது விரும்புவது" என்றனர். குருமகாசந்நிதானம். "அவ்வாறே யாகுக" என்று கூறி, நீராடி, தமது ஆன்மார்த்த பூசாமூர்த்தியாகிய சொக்கலிங்கத்தைப் பூசித்து, தியானசமாதியில் எழுந்தருளியிருந்து, "கருவில் இருந்த ஆன்மாவைக் கொணர்ந்து" ஞானதீக்ஷை புரிந்து, மீட்டிங்குவாரா நெறியாகிய சிவானந்தப் பெருவாழ்வில் அமர்த்தி வீடுபேற்றை வழங்கியருளினார்கள்.

ஒரு நாள் தஞ்சையை அரசுபுரிந்த மன்னன் கடலாட விரும்பிச் சேனைகள் சூழ காவிரிப்பூம்பட்டினத்தை நோக்கிச் செல்வானாயினன். இடையில் தருமபுரத்தை யெய்தினன். அதுசமயம் தருமபுரம் ஞானபுரீச்சுரருக்கு அர்த்தயாம பூசை நடந்துகொண்டிருந்தது. மணியோசையைக் கேட்ட மன்னன் பல்லக்கைவிட்டு இறங்கி, வணக்கஞ் செய்து, பின் பல்லக்கில் ஏறிப் புறப்பட்டான். அருகிலிருந்த பொறாமையுடைய புல்லர்கள் "இது ஒரு சைவச் சமாதி. இதை மன்னன் வணங்குதல் கூடாது. வணங்கிவிட்டபடியால் பிராயச்சித்தம் செய்து

கொள்ளவேண்டும்'' என்றார்கள். இதனைக் கேட்ட மன்னன், ''ஓ அப்படியா? இவ்விதமுள்ள இந்தச் சமாதியை இடித்தெறியுங்கள்'' என்று கட்டளையிட்டுச் செல்வானாயினன்.

மன்னனது உத்திரவைத்தாங்கிய ஏவலர்கள் வந்து கடப்பாரைகளைக் கொண்டு ஆலயத்தை இடிக்கத்தொடங்கினார்கள். அது கண்ட அடியார் குழாங்கள் ஆச்சாரியமூர்த்திகள் பால் விரைந்து சென்று, விஷயத்தை யறிவித்தார்கள். குருமூர்த்திகள் ''நீங்கள் ஒன்றுஞ் செய்யவேண்டா. அடங்கியிருங்கள்'' என்று கூறி அடியில்வரும் திருப்பாடலைப் பாடியருளினார்கள்.

ஈசன் பலகினன் என்றக்கால் ஆலயத்தில்
மோசம் வந்ததென்று மொழியலாம் ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானானால்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து.

பாடியவுடனே நடேசப்பெருமான் தனது குஞ்சிதபாதத்தின் சிலம்பொலியைக் கேட்பித்துத் திருவருள் புரிந்தனர். சஞ்சிதமகற்றும் குஞ்சிதபாதத்தின் சிலம்போசையைக் கேட்ட குருநாதர் இறைவன் திருவருளை நினைந்து உள்ளம் உருகி,

தேசஞ் சிவாலயங்கள் சேர வலையவொரு
மோசம் வந்ததையோ முதல்வனே — தேசத்து
மன்னை வெறுப் பேனோ வருவினையை யூட்டுவிக்கும்
உன்னை வெறுப் பேனோ உரை.

என்று பாடி பஞ்சாக்கரத்தைச் செபித்துக்கொண்டிருந்தார்கள்.

இருப்புக்கோல் படும் இடந்தோறும் உதிரம் பெருகியது. அதைக்கண்ட ஏவலாளர்கள் மூர்ச்சித்து விழுந்தனர். நகர் எல்லையைக்கடந்து சென்ற காவலன் கண்ணொளி நீங்கக் குருடாயினன். இடிக்குமாறு தூண்டியவர்களைப் பார்த்தான். அவர்கள் ஊமைகளாகித் திகைத்து நின்றார்கள். மன்னன் தனது குற்றத்தை யுணர்ந்து, மீண்டுந் தருமபுரத்தை யடைந்து, திருமடத்திற் சென்று சிவஞானச் செம்மலின் திருவடிகளில் வீழ்ந்து ''சிறியேன் செய்த பெரும் பிழையைப் பொறுத்தருளல் வேண்டும்'' என்று கூறிக் கண்ணீர் வடித்து வேண்டினன்.

கருணைவடிவான குருமூர்த்திகள் ''சிவபெருமான் திருவருள் புரியும்'' என்று கூறி அரசனை அழைத்துக்கொண்டு ஆலயத்

திற்கு எழுந்தருளினார்கள். மன்னன் "சுவாமீ! கடவுளைக் கண்டு மகிழக் கண்ணொளியில்லையே? எவ்வாறு தெரிசிப்பேன்?" என்று வருந்தினான். குருஞான சம்பந்தர் திருவருளால் ஒருகண் பெற்றான். ஏவலாளர்கள் மூர்ச்சித்திருப்பதையும் இருப்புக்கோல் பட்ட இடங்களில் உதிரம் வடிவதையும் பார்த்து வருந்தி குருமூர்த்திகளை வணங்கி வேண்டினான். சிவஞான தேசிகர் திருநீற்றினைத் தெறித்தார்கள். உதிரம் வடிவது நின்றது. ஏவலாளர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்து தொழுதார்கள்.

மன்னன் காவிரிப்பூம்பட்டினஞ் சென்று கடலில் நீராடித் திரும்பிவந்து, தருமபுரத்தின் தென்கீழ்த்திசையில் கூடாரமிட்டுத் தங்கி நாள்தோறும் மூப்போதும் சுவாமிதரிசனஞ் செய்து வந்தான். அவன் தங்கிய இடம் இப்போது மன்னம் பந்தல் என்று வழங்கப்படுகின்றது.

வழிபாடு புரிந்து வருகின்ற மன்னன் ஒருநாள் குருமூர்த்திகளை வணங்கி "சிலர் சைவசபாதி யெனறுகூறி என் அறிவை மயக்கிவிட்டார்கள். அதன் உண்மையை உரைத்தருள வேண்டும்" என்று வேண்டினான். அப்போது ஆச்சாரியமூர்த்திகள் வருணாச்சிரம சந்திரிகை என்ற நூலினைச்செய்து அவனுடைய ஐயத்தை யகற்றினார்கள். நாற்பத்தெட்டு நாட்கள் தங்கி மன்னன் வழிபட்டான். சிவஞான மூர்த்திகளது திருவருளால் மற்றொரு கண்ணும் பெற்றான். புல்லறிவாளர்கள் குருமூர்த்திகளை வணங்கி நிற்க அவர்களது ஊமைத்தன்மையும் நீங்கியது, அளவிலாத மகிழ்ச்சியுற்றமன்னன், தான்முதலில் தெரிசித்தது அர்த்தயாம பூசையே யாதலின், அது சிறப்பாக நடக்கும் பொருட்டு வேண்டிய நிலங்களை வழங்கி, குருமூர்த்திகளிடம் விடைபெற்றுத் தஞ்சை சென்றான்.

சிவஞானிகளது பெருமை இமயமலை போன்றது. அவர்களது திருவருளே இன்று உலகம் நின்று நிலவக் காரணமாகி நிற்கின்றது.

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

—திருக்குறள்

# கற்பு

## யமுனை

அன்று முழுவதும் தூறல் தூறிக்கொண்டே இருந்தது. குளிர்காற்று சலசல என்று வீசியது. பறவைகள் எல்லாம் நனைந்து நடுங்கியவண்ணமாக மரங்களில் பரதவித்துக் கொண்டிருந்தன. குளிரால் ஏனைய பிராணிகள் ஒடுங்கியிருந்தன. எருமைகள் மட்டும் கவலையின்றி தூறலுக்கு இடையில் சென்றுகொண்டிருந்தன. மரங்கள் குளிரால் நடுங்குவன போல் அசைந்தன.

யமுனையின் கணவன் சுரேசன் காய்ச்சலினால் படுத்தவண்ண மாகக்கிடந்தான். யமுனை கணவன் அருகில் இருந்து குறிப் பறிந்து வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தாள். அடிக்கடி அயலூரிலிருந்து உறவினர்வந்து சுரேசனைப் பார்த்து விட்டுச் சென்றனர். மருத்துவர் "அதிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கடினமான காய்ச்சல்; பிழைத்தால் மறு பிறப்புதான். என்னமோ தெய்வந்தான் துணைசெய்யவேண் டும்" என்று கூறினார். யமுனைக்கு மிகுந்த கவலை. வாடிய முகத்துடன் ஒவ்வொரு நிமிஷமும் கணவனையே கவனித்துக் கொள்வாள். தனது வழிபடுதெய்வமாகிய பராசக்தியை வேண்டுவாள். கண்களில் பெருகும் நீரை கணவனறியாவண் ணம் முன்றானையால் துடைத்துக்கொள்வாள். இரவில் இமை கூட கொட்டாமல் கணவன் நோக்கமறிந்து வேண்டுவன செய் வாள். அவளுடைய ஒப்பற்ற அன்பையும் ஏவலின் பண்பை யும் எண்ணி எண்ணி சுரேசன் அதிசயமடைந்தான். துன்பத் துக்கு இடையில் அவளை மனைவியாகப்பெற்ற தனது பூர்வ புண்ணியத்தைக் கருதி இன்பமடைந்தான்.

அன்று மாலை காய்ச்சல் கடுமையாகிவிட்டது. அன்று ஆயில்ய நட்சத்திரம். நோயாளிகளுக்கு அது அதிக தீமையை விளைக்கும். மருத்துவர் வந்து சுரேசனுடைய நாடியைப் பார்த்துவிட்டு வாடிய முகத்துடன் நின்றார். யமுனை, "அண்ணா! எப்படியிருக்கின்றது?" என்றாள் கேட்டாள். "அம்மா, ஒன்றுமில்லை; பயப்படவேண்டாம்" என்றார். வெளியே போகும்போது "அம்மா! அவர் விரும்பியதைக்

கொடுங்கள்'' என்று கூறினர். யமுனைக்கு மனம் உடைந்தது. ஆருத்துயரமுற்றுள்.

சுரேசன் மனைவியைப்பார்த்து, பேசமுடியாமல் மெல்லிய குரலுடன் "கஞ்சி'' என்றுன். வறுமைநோயால் வாடுகின்ற அவள் சமையலறையிற் சென்று பானைகளை யெல்லாம் சோதித்தாள்; அப்படியும் இப்படியுமாக ஒருபிடி அரிசி கிடைத்தது. தீமூட்ட விறகு இல்லை. என்ன செய்வாள் பாவம். மழையில் நனைந்தவண்ணமாக அடுத்த வீட்டிற் சென்று "காமாக்ஷி! விறகு இரண்டு கொடு; நாளை மறுநாளில் தந்துவிடுவேன்'' என்றுள், "அன்று தந்த ஆறணுவைக் கொடுக்க வழியில்லாத உனக்கு விறகுவேறே தரவேணுமோ! கையை முறித்து அடுப்பில் வை'' என்ற பதிலுடன் திரும்பி வீட்டிற்கு வந்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். தான் இளமையில் படித்த ஒரு கதைப்புத்தகம் அகப்பட்டது. அதைக் கிழித்து மெல்ல எரித்து கஞ்சிகாய்ச்சி சூடாகக் கணவனைக் குடிப்பித்தாள். அதையுண்ட அவன் அயர்ச்சியினுல் கண்களை மூடிக் கொண்டான்.

இரவு மணி ஏழு இருக்கும். யமுனை தலையிலே ஒரு கூடையைக் கவிழ்த்துக்கொண்டு மழையின் மத்தியில் அருகில் உள்ள அம்பிகை திருக்கோயிலுக்குச் சென்றுள். "ஏ! கருணும்பிகை! பராசக்தி! உலகமாதாவே! என் கணவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தருள்வாய்; என்னைக் கைநழுவவிட்டு விடாதே,

ஒருமாங்கனியை அடியவருக் குவந்தே யளித்த ஒருமாதுக்
கிருமாங்கனியை இனிதளித்த எந்தை மகிழும் இளங்குயிலே
தருமாங்கனையே சாம்பவியே தமியேன் தளரா வகையெனது
திருமாங்கலியந் தந்தருள்வாய் தெய்வக் கருணைத் திருத்தாயே

என்று துதித்து வேண்டினுள். தனது திருமாங்கலியத்தைக் கழற்றி அம்பிகையின் அடிமலரில் வைத்துவிட்டு வீடு திரும்பினுள்.

சுரேசன் கண்ணை விழித்தான். யமுனை எதிரே நின்றிருந்தனள். "பெண்ணே! கனவோ? நனவோ? அறியேன். இப்போது ஒரு சிறு பெண் என் வாயில் ஏதோ ஒன்றைப் போட்டுச் சென்றனள். எனக்கென்னமோ உடம்பில்

இருந்த சுமை நீங்கியதுபோல் இருக்கின்றது" என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

இரவு எப்படியோ ஒருவாறு நீங்கியது. பொழுது விடிந்தது. யமுனையின் கவலையும் விடிந்தது. சுரேசன் மெல்ல எழுந்து அமர்ந்தான். "யமுனை! எனக்கு உடம்பு நன்றாக இருக்கின்றது. பசியெடுக்கின்றது. காய்ச்சல் சிறிது கூட இல்லை. சமையல் செய். சாப்பிட வேண்டும்" என்றான். யமுனைக்குக் கணவன் திருமேனி நலம் உற்றதுகண்டு இன்பம் ஒருபுறம், உணவு செய்ய வழியின்மை கண்டு துன்பம் ஒருபுறம். பலப்பல எண்ணினாள். வீட்டிலே விற்கக்கூடிய பித்தளைப் பாத்திரமோ வேறு பொருளோ இல்லை. இறுதியில் அடுத்த தெருவில் உள்ள பழைய தோழியிடம் சென்று காற்படி அரிசி கடன் வாங்கிவந்து, சோறு வடித்து தோட்டத்தில் உள்ள கீரையைப் பறித்து புளியிட்டுக் கடைந்து மிளகுரசம் வைத்து, கணவனைப் பசியாற்றினாள்.

மறுநாள் மெல்லக் கணவன்பால் விடைபெற்று அடுத்த வீட்டுப்பெண்ணுடன் சென்று நிலக்கடலை வெட்டினாள். அதனால் வந்த சிறு ஊதியத்தைக் கொண்டு உணவைத் தயாரித்துக் கணவனை உபசரித்தாள். நாலைந்து நாட்களாக நிலக்கடலை வெட்டிவரும் அவளை அந்த நிலக்கடலைத் தோட்டத்து முதலாளி கண்டான். வெய்யிலில் ஜொலிக்கும் மெருகிட்ட தங்கம் போன்ற அவளுடைய அழகின் மேன்மையைக்கண்டு தேனுண்ட வண்டுபோல் மதிமயங்கினான். நிலக்கடலை வெட்டிய மற்றப் பெண்களுக்கெல்லாம் கூலி கொடுத்து அனுப்பிவிட்டு, இறுதியில் யமுனையின் கையில் எட்டணா கொடுக்கவேண்டியதற்குப் பதில் ஐந்துரூபாய் எடுத்து நீட்டினான்.

"அண்ணா! எட்டணா தானே தரவேண்டும்?"

"உனக்கு இன்னும் நிறையத்தரவேணும். உன் அன்பு இருந்தால் போதும்.,,

"அண்ணா! வேலைசெய்ததற்குக் கூலி தந்தால் போதும். மிகுதி வேண்டாம்"

"இல்லை வைத்துக்கொள். உனது வறுமையைப் பார்த்து நான் வருந்துகின்றேன். நாளைக்கு நீ நம்ம வீட்டுக்கு வா. ஒரு சீலை தருவேன்.

"அண்ணு! மிக்கமகிழ்ச்சி, தங்கள் போன்ற தயாளமுடைய வர்களைக் காண்பது அரிது. இந்தப்பணத்தையும் நாளைக்கு நான் வீட்டில் வந்து வாங்கிக்கொள்ளுவேன். உங்கள் தயவு இருந் தால் போதும்."

யமுனை வேகமாக வீட்டிற்கு நடந்துவந்தாள். அவன் தீய நினைவுகொண்டிருப்பதை யறிந்து வருந்தினுள். தனவந்தர்களில் பலர் தங்கள் செல்வச் செருக்கினுல் ஏழைப் பெண்டிருடைய கற்பை அபகரிப்பதைக் குறித்து மனம்பதைத்தாள்" சாதாரண பெண்களில் ஒருத்தியாக அந்தப்பேதை என்னை நினைத்தான் போலும்; கற்பு கல்லினும் வலியதன்ருே? இனி இந்த மடைய னிடம் வேலைக்குப் போகக்கூடாது. நற்குடியிற் பிறவாதபாவி பிறர் மனைவியென்று சிறிதும் எண்ணுமல் நரகிற்கு வழிதேடு கின்ருன்"என்று கருதினுள். இலை தைத்து தனக்குத் தெரிந்த பெண்கள் மூலம் கடையில் விற்பனைசெய்து அதனுல் வரும் அற்ப வருவாயைக் கொண்டு கணவனைக் காப்பாற்றிவந்தாள். தேவியருளால் சுரேசன் சுகமுற்ருன். குடும்ப சுமையை அவன் தாங்கிக்கொண்டான். யமுனை பராசக்தி தனக்கு மாங்கல்ய பிச்சை தந்ததற்கு மகிழ்ந்து இடையருது அன்னை பராசத்தியை வழுத்தினுள்.

தெய்வம் யமுனையை வேருருவகையில் சோதிக்கத் தொடங்கியது. சுரேசனுக்கு மெல்ல மெல்ல தீநட்பு ஏற் பட்டது.

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்ருகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு.

தீயவரோடு இணங்கிய சுரேசன் பெருங்குடியனுகி விட் டான். தன் கணவன் தீயவரோடு உறவு கொள்வதையும், சதா சிவந்த கண்ணுடன் இருப்பதையும் கண்டு யமுனை மிகுந்த வேதனையடைந்தாள். கணவன் கால்மீது வீழ்ந்து கூறுவாள்.

"பிராணபதீ! ஒரு மனிதனுக்கு உயர்வும் தாழ்வும் நட்பி னுல்தான் வரும். தவம், புகழ், வாய்மை, பெருமை முதலியவை கட்கெல்லாம் ஒவ்வொரு அதிகாரம் புகன்ற திருவள்ளுவர் நட்புக்குமட்டும், நட்பு, நட்பாராய்தல், தீநட்பு, கூடாநட்பு என்று நான்கு அதிகாரங்கள் நவின்றனர். நட்பு அத்துணை

விரிந்த பொருள். நல்லாருடைய நட்பினால் உயர்ந்தவர் பலர்; அங்ஙனமே தீயாருடைய நட்பினால் தாழ்ந்தவர் பலர்; தாங்கள் தீயவருடைய தொடர்பை விடுத்துத் தூயவரோடு பழகுங்கள். தாங்கள் அருந்தும் கள் நஞ்சினும் கொடியது. நஞ்சு உண்டாரைக் கொல்லுமேயன்றி நரகத்தை நல்காது. கள் உண்டாரது அறிவை மயக்கி அக்கிரமங்களைச் செய்வித்து மீளா நரகிற்கு ஆளாக்கும்.

"மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு"

என்றார் திருவள்ளுவர். அடிமையாகிய நான் தங்கட்கு அதிகம் கூறலாமா? தாங்கள் இனியாவது இந்தக் கொடிய குடியை விட்டு ஒழியுங்கள்" என்று இனிமையாக இயம்பினாள்.

அதைக்கேட்ட சுரேசன் அடங்காத கோபங் கொண்டான். "சீ, நாயே! நீயா எனக்குப் புத்தி சொல்வது? நான் என்ன அறிவில்லாதவனா? அது என்னடி ஆகாசப் பால். அதனுடைய பெருமை உனக்கென்னடீ தெரியும். விண்ணுலகம் மண்ணுலகில் தெரியுமே. ஆயாசத்தையெல்லாம் அகற்றுமே. கழுதை! கொஞ்சம் சாஸ்திரம் படித்த திமிராலே எனக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டாயோ" என்று வைது ஓங்கி ஒரு அடி கொடுத்துவிட்டு வெளியே சென்றான்.

யமுனை, தன்கணவனுடைய கோபத்தையும், அவனுடைய முரட்டுத் தனத்தையும் நினைத்துப் பெரிதும் வருந்தினாள். கண்ணீர் சொரிந்தாள். அன்னை பராசக்தியை நினைந்து உருகினாள்.

வரவர சுரேசன் பெருங்குடியனாகிவிட்டான். தான் சம்பாதிக்கும் சம்பாதனை முழுவதையும் குடித்து விடுவான். குடிவெறியில் மனைவியை அடிப்பான்; உதைப்பான். யமுனை மிகுந்த பொறுமையுடன் கணவன் புரியும் கொடுமைகளையெல்லாஞ் சகித்துக்கொண்டு சிறுதொழில்களைச் செய்து குடும்பத்தை நடத்தி வந்தாள். நல்ல உணவு இன்மையினாலும், மனத்தில் மகிழ்ச்சி யின்மையினாலும், அவளுடைய உடல் மெலிந்தது. இயற்கையாக அவளிடம் குடியிருந்த அழகின் மெருகு குன்றியது. அத்தனைத் துன்பங்களையும் அவள் அன்னை

பராசக்தியைத் தியானிக்கும்போது மறந்துவிடுவாள். அது தான் அவளுக்கு ஆறுதலையளித்தது.

ஒருநாள் சுரேசன் நிரம்பக் குடித்துவிட்டு தெம்மாங்கு பாடிக்கொண்டு பாதையில் நின்றுகொண்டிருந்தான். அது பலரும் போய்வரக்கூடிய பொதுப்பாதை. அவ்வழியே வந்த ஒருவன், "ஏ குடிகாரா! விலகு" என்றான்.

சுரேசன்: யாரடா அவன். என்னைக் குடிகாரன் என்று சொல்பவன். நாயே! என் பணத்தைப் போட்டு நான் குடிக்கிறேன். உனக்கென்னடா? உதவாக்கரை, என்னிஷ்டம் நான் குடிப்பேன். நீ யாரடா என்னை கேட்கிறதற்கு?

ஏ! என்னடா மரியாதை இல்லாமல் பேசுகின்றாய். பத்து பேர் நடக்கின்ற பாதையிலே நின்று இடையூறு செய்கின்றாயே. உன் பாட்டனுடைய பாதையா இது? விலகடா விலகு.

அடே சூரப் புலியே! உன் பாட்டனுடைய பாதையா? நீ விலகிப் போயேண்டா. வீணா உதைபட்டுச் சாகாதே.

என்னடா? மிச்சமாகப் பேசுகின்றாய். உன்னை இப்போது என்ன செய்கின்றேன் பாரு.

உடனே சுரேசன் ஆலகாலம் போல் சீறி தன் இடுப்பில் இருந்த கத்தியால் அவனைக் குத்திவிட்டான். அவன் சிறிது நேரத்திற்குள் மாண்டுவிட்டான். அரசனுடைய சேவகர்கள் வந்து சுரேசனைப் பிடித்து விலங்கு பூட்டிக் காவலில் வைத்தார்கள்.

இச்செய்தி ஊரெங்கும் பரவியது. யமுனை கேட்டு இடியேறுண்ட நாகம்போல் நடுங்கினாள். அவள் மனம் அலைகடல் துரும்புபோல் தத்தளித்தது. தன் வாழ்வு முடிந்தது என்று எண்ணி ஏங்கினாள்.

"பாழும் மதுவே! நீ எத்தனை எத்தனை தீமைகளைப் புரிந்து வருகின்றாய். உன்னால் கெட்ட குடும்பங்களுக்கும் அளவு உண்டோ? ஆ! எத்தனை கொலைகளை நீ அஞ்சாது செய்யத் தூண்டி விடுகின்றாய். புனிதமான இந்தப் பாரதநாட்டில் உனக்கு விநாசகாலம் வராதா? அரசாங்கம் சட்டமூலம்

உன்னைத் தடுக்காதா? நான் கணவனையே கடவுளாக எண்ணியது சத்தியமாயின் இன்னும் சிறிது காலத்திற்குள் உன்னை அரசாங்கம் சட்டவிரோதமாகச் செய்து தடுப்பதாக.''

கற்பு நிறைந்த யமுனை இவ்வாறு மதுவைச் சபித்தாள். பூமியில் வீழ்ந்து புரண்டாள். ஊண் உறக்கமின்றி வருந்தினாள். அவள் துன்பத்தைக் கண்டு இரங்காதார் ஒருவருமில்லை.

மன்னர் பெருமானுடைய அவையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது. மன்னர் சுரேசனை நோக்கி "நீ அவனைக் கொன்றனையா?'' என்று வினவினார். சுரேசன், "அரசே! அடியேன் குடிவெறியால் செய்வது இன்னது என்று அறியாமல் அறிவு மயங்கிக் கொன்றுவிட்டேன். நான் பொய் புகலேன். கொன்றது உண்மைதான்'' என்றான். அரசர்கோமான் அவனுக்கு மரண தண்டனை விதித்தார். "வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சுரேசனைத் தூக்கிலிடுவது'' என்று தீர்மானிக்கப்பட்டது. சுரேசன் அதுகேட்டு நடுங்கினான். தன் அருமை மனைவி முன்கூறிய அறவுரையை நினைந்தான். குடியின் கொடுமையை எண்ணி வருந்தினான். கண்ணீர் சொரிந்தான்.

வியாழனன்று மாலை 3 மணி முதல் 6 மணிவரை சுரேசனுடைய உறவினர் சிறையில் சென்று சந்திக்கலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. யமுனையும் மற்றுமுள்ள உறவினரும் நண்பரும் வந்து அவனைச் சந்தித்து வருத்தத்தைத் தெரிவித்தார்கள்.

யமுனை கணவன் கால்மீது வீழ்ந்து "பிராணபதி! அன்று நான் கூறிய சொற்களைக் கேளாமற் போனீரே! இன்று தங்களுக்கு இவ்வாறு வினை மூண்டதே. தங்களைப் பிரிந்து நான் எவ்வாறு வாழ்வேன். இத்தனைக்கும் காரணம் தங்களுடைய தீ நட்பே. என் வாழ்வு முடிவுபெற்றதே. உங்கள் திருமுகத்தை இனி என்று காண்பேன்'' என்று அழுதாள்.

சுரேசன், "என் அருமைக் கண்ணே! அழாதே. நீ மகா உத்தமி. நான் நோய்வாய்ப்பட்டிருந்த போது நீ உடம்பைச்

சாருகப் பிழிந்து அரும்பாடுபட்டு என்னைக் காப்பாற்றினாய். அதை நான் மறந்து, உன்னை பலதுன்பங்களைச் செய்து வருத்தினேன். நான் பெரும் பாவி. அறிவுள்ள மனைவியாகிய உன் நீதிமொழிகளைக் கேளாமையால் இத்துன்பம் வந்தது. அன்பும் அறிவும் உள்ள மனைவியின் பேச்சை அசட்டை செய்வதால் வரும் இடரை இன்று உணர்ந்தேன். கணவனுக்கு அறிவு புகட்டும் பொறுப்பு மனைவியர்பால் பெரியவர்கள் வைத்திருக்கின்றார்கள். "விறல் மந்திரி மதியும் பேசில் இவையுடையாள் பெண்" என்பது நீதி வெண்பாவன்றோ? என்னால் நீ ஒருநாளும் சுகப்படவில்லை. நான் மாண்ட பிறகாவது கவலையற்று இரு' என்றான். மாலை 6 மணி ஆனபடியால் யமுனை முதலியோரை சிறையைவிட்டுக் காவலர்கள் கடத்தினார்கள்.

அந்நகரில் சுரேசனைக் குறித்துப் பலர் பலவாறு உரையாடுவாராயினார்கள்.

பாவம்! சுரேசன் நல்லவன், பாழும் குடியால் கெட்டான் என்றனர் சிலர்.

அவனைச் சொல்லிப் பயனில்லை. அவனுடன் சேர்ந்த ஆட்களைச் சொல்லவேண்டும். அயோக்கியர்கள், அவனை அநியாயமாகக் கெடுத்துவிட்டார்கள் என்றனர் சிலர்.

யமுனை மகா பதிவிரதை. அத்தையலை நினைத்தால் மனம் பதைக்கின்றது. அம்மாதரசியின் கதி பரிதாபமாக ஆய்விட்டது என்றனர் சிலர்.

கொலைசெய்த பாவம் சும்மாவிடுமா? வேண்டுந்தான் இத் தண்டனை. அநியாயக்காரன். குடிகாரன், தொலையட்டும் என்றனர் சிலர்.

குடியால் விளைந்த கொடுமையிதைக் குறியாதுலகம் இனி யென்பார்
மிடியால் வருந்தும் யமுனையினி மிகவும் வருந்துவாள் என்பார்
பிடியால் அடங்கும் இடையுடையாள் பிழையாள் இறந்துபடும் என்பார்.
தடியால் உடைந்த பாண்டப்போல் தகர்ந்த தன்னுள் வாழ் வென்பார்,

யமுனை அன்னை பராசக்தியின் திருக்கோவில் சென்று வணங்கி "தேவீ கருணும்பிகை! அன்று என் மாங்கல்யத்தை உன் திருவடியில் காணிக்கையாகத் தந்தேன். நோய்வாயி லிருந்து என் கணவனைக் காப்பாற்றிணுய். இன்றும் என் கணவனைக் காப்பாற்றுவாய். இல்லையேல் என்னை உன் திரு வடியில் சேர்த்துக்கொள். உன் பாத சாக்ஷியாக நான் கணவனை யிழந்து உலகில் வாழமாட்டேன். நித்ய கல்யாணி! சத்திய சொரூபியே! எனக்கு மாங்கல்ய பிச்சை கொடு. என்னைக் கை நழுவ விட்டுவிடாதே. நான் உன் அடிமை. நீ என் தாயல் லவோ? சேய்படு துயரைத் தாய் போக்குதல் கடன் அன்றே! என்னுல் இந்தத் துன்பம் தாங்கமுடியவில்லையே" என்று முறையிட்டு அழுதாள்.

அன்னை கௌமாரியின் அருளால் அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே வீட்டிற்கு வந்தாள். சுரேசன் அணிந்து கொள்ளும் உடைகளை யணிந்துகொண்டாள். மெல்ல சிறைச் சாலை சென்றுள். நடு இரவு, நாயும் பேயும் உறங்குகின்ற சமயம். எங்கும் ஒரே இருள். காவலர் சிறிது மயங்கியதருணம் பார்த்து உள்ளே சென்றுள். கணவனைத் தொழுது, "சுவாமீ! என் வார்த்தையை இப்பொழுதாவது கேளுங்கள். மெல்ல நீங்கள் வெளியே சென்று ஒருவர் கண்ணுக்கும் படாமல் நமது வீட்டிற்குள் இரும்" என்றுள். சுரேசன் "பெண்ணரசே! நான் சென்றுவிட்டால் ஆண் உருவத்தில் என்னைப்போல் உள்ள உன்னை நாளைக் காலை தூக்கிலிட்டுவிடுவார்களே. உன்னை யிழந்து நான் எவ்வாறு வாழ்வேன்?" என்றுன். யமுனை "என் அன்பிற்குரிய ஆர்வலரே! இப்போது அதிகம் பேசக்கூடாது. நீங்கள் நான் கூறியதுபோல் செய்யும். நான் தப்பித்துக் கொண்டுவருவேன். தாமதிக்காமல் செல்லும்" என்றுள். சுரே சன் மனைவியைக் கட்டியணைத்து அவள் அன்பைப்பருகி மெல்ல வெளியே சென்றுவிட்டான்.

யமுனை சுரேசனுடைய உடையையுடுத்து ஆண்வடிவில் இருந்தனள். மறுநாள் காலை காவலர் தூக்கிலிடும் பொருட்டு தூக்குமேடைக்கு அழைத்துச் சென்றனர். தூக்கிடுந் தரு ணத்தில் ஒரு காவலன் "ஓ இது சுரேசன் அன்று, வேறு யாரோ தெரியவில்லை; ஆள் மாருட்டமாக இருக்கின்றது" என்று கதறினுன்.

காவலர் அரசனிடம் கொண்டுபோய் நிறுத்தி "மன்ன ரேறே! இவன் தண்டனைக்கு உரியவனன்று, எப்படியோ அவன் தப்பித்துக்கொண்டான். இவன் அவன் உடையை யுடுத்துக்கொண்டு இருக்கின்றான். தாங்கள் விசாரித்து உண் மையை யறியுங்கள்" என்றான்.

மன்னர்பெருமான் திகைத்தார். "நீ யார்? உண்மையையுரை. மரணத்திற்குத் துணிந்துவந்த உன் செய்கை மிகவும் அதிசய மாக இருக்கின்றது. யார் நீ" என்று வினவினார்.

யமுனை, உடனே தன் ஆணுருவை மாற்றி பெண்ணுரு வுடன் அரசன் அடிமலர் மீது வீழ்ந்து அழுது "என் தந்தையே! நான் தண்டனைக்கு உரியவருடைய மனைவி. என் பெயர் யமுனை. என் கணவர் மிகவும் நல்லவர். ஏதோ குடிவெறியால் குற்றம் செய்துவிட்டார். அவரையிழந்து நான் தங்கள் செங்கோல் சாட்சியாக விதந்துவாகி இவ்வுலகில் வாழ மாட்டேன். பெண்களுக்குக் கணவன் கண்கண்ட கடவுள். நான் அவரது திருவடியையே பூசிக்கும் நியமம் பூண்டவள். என்னை வேண்டி அவரை மன்னித்துவிடுங்கள். தாங்களோ கருணாமூர்த்தி. தங்கள் மகள் போன்ற நான் வைதவ்யத்தையடையலாமா? என்கணவனைக் காப்பாற்றி எனக்கு மாங்கல்ய பிச்சை தாருங் கள். இல்லையேல் அவருக்குப் பதில் என்னைத் தூக்கிலிடுங்கள். ஏழையைத் துன்பக்கடலில் தள்ளாமல் கரையேற்றுங்கள்" என்று கல்லுங் கரையும்படி முறையிட்டாள்.

மன்னர் மனம் உருகியது. அன்பு பெருகியது. "அம்மா! அழாதே. உன்போன்ற கற்பரசியை நான் கண்டதில்லை. நீ என் நாட்டில் இருப்பது நாடு செய்த தவம். உன்போன்ற மாதரசிகளால்தான் மழை பொழிகின்றது. உன் நாயகன் பொருட்டு உயிரைத் தரத் துணிந்தனையே! ஆ! ஆ!! என்னே கற்பின் மாண்பு. உனக்கு எனது வணக்கம் உரியதாகுக. கற்பரசியான சாவித்திரிக்காக இயமன் சத்தியவானைத் தந் தான். நான் உன் கணவனை உனக்குத் தருகின்றேன். நீ சுகமாக வாழ்வாயாக" என்று அருள்புரிந்தார்.

சுரேசனுக்கு அரசாங்கத்தில் ஒரு உத்தியோகந் தரப்பட் டது. சுரேசன நல்ல ஒழுக்கத்துடன் யமுனையோடு அன்பு வாழ்வில் இனிது வாழ்ந்தான்.

# சொல் வன்மை

மதுரைக்கு அருகே திருப்பூவணம் என்ற ஒரு சிவத்தலம் உண்டு. தேவாரப் பாடல் பெற்றது. அவ்வூரிலுள்ள சிவாலயத்தில் புஷ்பவனக் குருக்கள் பூசை செய்து வந்தார். இனிமையாகவும் சதுரப்பாடாகவும் பேசுவதில் அவர் வல்லவர். கோயிலுக்கு எதிரில் ஓங்கி வளர்ந்த அழகிய மருதமரம் ஒன்று உண்டு. காலை மாலைகளில் கோயில் பூசை முடிந்தபின் குருக்கள் இந்த மரத்தின் நிழலில் இருந்து இன்புறுவர். நல்ல காற்று வீசும். அருகில் வைகையாறு ஓடுகின்றது. மனத்திற்கு நல்ல சாந்தியைத் தரும்.

அந்தத் திருக்கோயில் சிவகங்கை சமஸ்தான ஆட்சியைச் சேர்ந்திருந்தது. அப்போது சிவகங்கை சமஸ்தானத் தலைவராக இருந்தவர் மருத பாண்டியர். இப்பாண்டியர் காளையார் கோயிலுக்கு ஒரு திருத்தேர் புரிவாராயினர். அத் தேருக்கு அச்சு மரம் பெரியதாக வேண்டியிருந்தது. திருப்பூவணம் கோயிலுக்கு முன்னர் வானளாவி வளமுடன் வளர்ந்திருந்த மருத மரத்தை வெட்டிவருமாறு சிலரை ஏவினர். மன்னருடைய கட்டளைப்படி வந்த ஆட்கள் ஆளுக்கு ஒரு கோடரி கொண்டு மருத மரத்தை வெட்டச் சென்றனர். இதனை புஷ்பவனக் குருக்கள் கண்டார். அவர் பிரியமாக இருந்து காற்று வாங்கும் மரம் வெட்டப்படுவதைக் கண்டு திடுக்கிட்டார். ஓடி வந்தார். வெட்ட முயன்ற ஆட்களை, "அரசர்மேல் ஆணை; வெட்டக் கூடாது" என்று தடுத்தார். ஆட்கள் அரசர்மீது ஆணையிட்டதனால் அஞ்சினர்கள். அரசரிடஞ் சென்று "மரத்தை வெட்டா வண்ணம் குருக்கள் தடுக்கின்றார்" என்று கூறினர்கள்.

மன்னருக்குக் கோபம் மூண்டது. "நமது ஆட்சிக்கு உட்பட்ட கோயில் குருக்கள் தடுக்கின்றாரா? என்ன ஆச்சரியம்! நாம் செய்கின்ற தேருக்கு உதவக்கூடிய மரத்தையா தடை செய்கின்றார். நல்லது" என்று படையுடன் புறப்பட்டு திருப்பூவணம் வந்தார். "கூப்பிடு குருக்களை" என்றார். அரச சேவகர்கள் சென்று குருக்களைப் பார்த்து "ஐயா! உங்களை மன்னர் பெருமான் கூப்பிடுகின்றார். சீக்கிரம் வாருங்கள்" என்றார்கள்.

குருக்கள் பாவம்! நடுங்கிவிட்டார். "மன்னனுடைய கோபத்துக்கு ஆளானேமே? எவ்வாறு தப்பித்துக் கொள்வது; தேவ தேவா! மகாதேவா! என்ன செய்வேன்" என்று கலங்கினர். பயந்த வண்ணமாக மருத பாண்டியரிடம் வந்தார்.

மன்னர், "என்ன ஐயா! நான் காளையார் கோயிலுக்குப் புரியும் தேரின் அச்சு மரத்திற்காக இதை வெட்டச்சொல்லி ஆளையனுப்பினல், நீர் அரசன் மேல் ஆணையென்று கூறித் தடுத்தீராமே" அரசன் ஆணைக்கு மேல் ஒரு ஆணையுண்டோ?" என்று கோபத்துடன் கேட்டார்.

குருக்கள், "மன்னர் பெருமானே! சிறிது மனதைச் சாந்தப்படுத்திக்கொண்டு கேளுங்கள்.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்பது சங்ககாலத்து வாக்கு. தாங்கள் இந்த உலகத்தின் உயிர்; தங்கள் ஆணைக்கு மேற்பட்ட ஆணை எந்த உலகிலுமே கிடையாது. தாங்களும் தங்கள் செங்கோலும், தங்கள் அரசாட்சியும் மேன்மேலும் ஓங்கி நீடூழி வாழவேண்டும் என்று சதா பரமேசுரனிடத்தில் வேண்டிக்கொண்டிருக்கின்றேன். "வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக" என்று கூறுவேன். தங்கள் குடையின்கீழ் எல்லா உயிர்களும் வாழ்கின்றார்கள். தங்கள் குளிர்ந்த பூச்சக்கிரக் குடைநிழலே எல்லாத்துன்பங்களையும் மாற்றி சுகந் தருகின்றது. அதுபோல் இந்த மரம் பெருமானுடைய திருக்கோயிலுக்கு முன் நின்று அனேக உயிர்களுக்கு வெய்யிலின் கொடுமை நீக்கிக் குளிர்ந்த நிழலைத் தருகின்றது. தங்கள் திருநாமம் மருதபாண்டியர்; இம்மரம் தங்கள் திருநாமத்தைக் கொண்டது. ஆதலின் இந்த மரத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கும் மற்றவர்களுக்கும் அரசராகிய தங்கள் நினைவு வரும். நானும் மற்றப் பெரியோர்களும் இம்மரத்தைக் காணும்போதெல்லாம் மன்னர்பிரான் நீடூழி வாழ்க என்று பரம கருணாநிதியாகிய எம்பெருமானை வேண்டிக்கொள்வோம். ஆதலின் தங்கள் நாமம் தாங்கி தங்களை நினைவு செய்யும் இம் மரத்தை வெட்டுவது சரியன்று என்று எண்ணியே தடுத்தேன். தங்கள் திருவுள்ளம் எப்படியோ அப்படியாகட்டும்" என்றார்.

அழகிய நெஞ்சையள்ளும் இந்த செஞ்சொற்களைக் கேட்டார். மன்னன் மனம் உருகியது. குருக்கள் மீதுள்ள சினம் மாறி மிகுந்த அன்பு ஏற்பட்டது. நம் மீதுள்ள அன்பு காரணமாகவே நமது பேரைத் தாங்கிய இம்மரத்தை வெட்டக்கூடாது என்று தடுத்தார். அது நியாயந்தான் என்று எண்ணி மரத்தை வெட்ட வேண்டாம் என்றார். வேறு ஒரு மரத்தைத் தேடி வெட்டுமாறு பணித்தார். குருக்களுக்கு பட்டு பீதாம்பரமும் பொற்காசுகளும் பரிசுகளாக வழங்கினார்.

கேட்டார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

என்ற திருவாக்கின்படி நண்பரும் பகைவரும் விரும்புகின்ற வகையில் பேசுவதே சொல்வன்மை. இச் சொற் செல்வம் படைத்தவர்கள் மிகச்சிலரே. குருவருளாலும் திருவருளாலுமே இது கிடைக்கும். வில்வன்மையைக்காட்டிலும் சொல் வன்மையே சிறந்தது.

---

Printed & Published by M. Madhusoodana Sivam at the Thiruppugal Amirtham Press, 144 Swaminaicken Street, Chindaripeta, Madras, Editor: Sri Kirupanandavari.

# "திருப்புகழமிர்தம்" சந்தா விவரம்.

| | | |
|---|---|---|
| ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, சிலோன் | .... ரூ. 2-0-0 |
| | பர்மா, மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு | .... ரூ: 2-8-0 |
| | தனிப்பிரதி (உள்நாடு) | .... ரூ. 0-3-0 |
| | ,, இலங்கை | .... 25 சதம். |

1. சந்தாதாரராகச் சேர விருப்பமுள்ளவர்கள் ஆண்டுக் கட்டணத்தை முன்னதாகவே செலுத்தவேண்டும். மணியார்டர் மூலம் சந்தாவைச் செலுத்துபவர்கள் மணியார்டர் கூப்பனில் விலாசத்தை விவரமாக எழுதியநுப்பவேண்டும்.

2. நமது பத்திரிகை ஒவ்வொரு சித்திரையினின்றே தொடங்கும். ஆதலால் நேயர்கள் எந்தத் திங்களில் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவ்வாண்டு சித்திரையினின்றே இதழ்கள் அநுப்பப்படும். ஒரு ஆண்டுக்கு குறைந்த சந்தா கிடையாது.

3. நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் மாதம் 16-ந்தேதி தபாலில் சேர்க்கப்படும்.

4. இதழ் கிடைக்கப் பெருத சந்தா நேயர்கள், அத் தமிழ் மாதம் 15உக்குள் எழுதிப்பெறவேண்டும். அதற்கு மேல் எழுதுவோர் 0-3-0தபால் ஸ்டாம்பு அனுப்பினல்தான் வேறு பிரதி அனுப்பப்படும். இதழ் கிடைக்கப் பெருதவர்கள் தமது ஊர் தபாலதிகாரிகளுக்குந் தெரிவிக்கவேண்டும். பலமுறை சரிபார்த்து இதழ்கள் தபாலில் சேர்க்கப்படுவதால் காரியாலயத்தில் தவறு நேர இடமில்லை.

5. விலாசமாறுவோர், தமது மாறுதல் விலாசத்தை உரிய காலத்திற்குள் நமது காரியாலயத்திற்கும், போஸ்டாபீசுக்கும் தெரிவிக்கவேண்டும். இன்றேல் பழைய விலாசத்திற்கே அடுத்த இதழ் அநுப்பபபடும். அதற்கு யாம் பொறுப்பாளியல்ல.

**திருப்புகழமிர்தம் காரியாலயம்**
144, சாமிநாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2

---

## திருப்புகழமிர்தம் ஆண்டுப் புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| விஷு | [ஆருவது] | ஆண்டுப் புத்தகம் விலை ரூ | 2- 8-0 |
| சுபானு | [எட்டாவது] | " | 2- 8-0 |
| தாரண | [ஒன்பதாவது] | " | 2- 8-0 |
| விய | [பதினோராவது] | " | 2-12-0 |
| சர்வசித்து | [பன்னிரண்டாவது] | " | 2-12-0 |
| சர்வதாரி | [பதின்மூன்ருவது] | " | 3- 0-0 |

தபாற்செலவு ஆண்டு மலர் 1-க்கு 0-4-0. ரிஜிஸ்ட்ரேஷன் செலவு 0-4-0 சேர்த்து அனுப்பவேண்டும்.

**கரூர் விலை என்பதே நம்பிக்கை**

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

பனாரஸ், சேலம், பெங்களூர், கோயமுத்தூர், காஞ்சீபுரம், மதுரை

**பட்டு & நூல் ஜவுளி தினுசுகள்**

ஏராளமாக வரவழைத்திருக்கிறோம். தவறாது விஜயம் செய்யுங்கள்

# ஜெ. மு. சாமி

கீழமாசி வீதி, (பெரிய விளக்குத்தூண் சமீபம்) மதுரை

*Head Office:*
வடக்கு மாதுளம் கொல்லைத்தெரு, உறையூர், திருச்சி

*Branch:*
கடை வீதி **நாகப்பட்டினம்**